

# முகிழ்

சிறுவர் வாசிப்பு வட்டம்

வலிதெற்கு பிரதேச சபை

பொது நூலகம்

சுன்னாகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகிழ்

## இதழ் 02



சிறுவர் வாசிப்பு வட்டம்

பொது நூலகம்

வலிகாமம் தெற்கு பிரதேச சபை


சுன்னாகம்

2023

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் எண்ணக்கருக்கள்

சிறுவர் வாசிப்பு வட்டத்தின் 2வது **"முகிழ்"** சஞ்சிகையினூடாக உங்களை சந்திப்பதில் பெருமகிழ்வு அடைகின்றோம். சுன்னாகம் பொது நூலக வாசிப்பு விரிவாக்கல் செயற்பாடுகளில் ஒன்றாகச் சிறுவர் வட்டம் 12.11.2021 அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. அதன் நோக்கங்களில் ஒன்று சிறுவர்களிடம் வாசிப்பு பழக்கத்தை உருவாக்கி அதனை மற்றைய சிறுவர்களுக்கும் சென்றடையச் செய்வதாகும். அதன் ஒரு சிறு செயற்பாடாக வாசிப்பு வட்டச் சிறார்களின் பல்வேறு திறமைகளை ஒன்று திரட்டி சிறுவர் சஞ்சிகை ஒன்றினை வெளியிடத் தீர்மானித்தோம். அதனூடாக ஒவ்வொரு சிறாரிடமும் புதைந்திருக்கும் திறமைகளை வெளிக்கொணர்வதே நோக்கமாகும். அது சிறுவர்களின் ஆரம்ப நிலை என்பதால் மொட்டிலிருந்து வெளியாகும் ஆரம்ப பருவம் **"முகிழ்"** என நாமமிட்டிருந்தோம். இச் சஞ்சிகையானது சிறுவர் புத்தக தினத்தினை கொண்டாடும் விதமாக நாம் வெளியிடும் இவ் ஆரம்பச் சஞ்சிகையாக 06.04.2022 முதல் முகிழ் முகிழ்ந்தது. 2வது முகிழ் 02.04.2023ல் உங்கள் கைகளில் தவழவிருக்கின்றது. இச் சிறார்களின் படைப்பாற்றலுக்கு ஊக்கமளித்து எமது செயற்பாடுகளுக்கு உறுதுணையாக இருக்கும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றோம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் வாசிப்பு வட்டம்

சிறு வயதிலேயே சிறுவர்களிடம் வாசிப்பை அறிமுகப்படுத்தி மேம்படுத்த வேண்டும் எனும் நோக்கில் சுன்னாகம் பொது நூலகத்தில் 12.11.2021 அன்று சிறுவர் வாசிப்பு வட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இவ் வாசிப்பு வட்டமானது வாசிப்பை மேம்படுத்துவதுடன் நின்றுவிடாது சிறுவர்களிடம் நிர்வாகத் திறனையும் உருவாக்கும் முகமாக தலைவர், செயலாளர், பொருளாளர் எனச் சிறுவர் நிர்வாகத் தெரிவுகள் மேற்கொள்ளப்பட்டு அவர்களே நிர்வாகத்தினையும் திறம்பட நடாத்திச் செல்கின்றனர்.

இவ் வாசிப்பு வட்டச் செயற்பாடுகள் ஒன்றுவிட்ட ஒரு வெள்ளிக்கிழமைகளில் சிறுவர்கள் ஒன்றுகூடி நூல்கள் வாசித்தல், நூல் விமர்சனம் செய்தல், பாட்டுப் பாடுதல், கவிதை சொல்லல், விடுகதை பொது அறிவு வினாக்களை வினாவி விடை காணுதல் எனப் பல்வேறு நிகழ்வுகள் நடைபெறுகின்றன. இச் செயற்பாட்டால் மேடைக் கூச்சம், தயக்கம் என்பன நீங்கப்பெற்று எதற்கும் தயாராகும் பயிற்சி அனுபவம் கிடைக்கின்றது. மேலும் சிறுவர்களை உற்சாகமூட்டும் வகையில் விளையாட்டுக்களும் இடம்பெறுகின்றன. இத்தகைய செயற்பாடுகளை தொடர்ந்து செயற்படுத்தி வாசிப்புடன் எதிர்கால எழுத்தாளர்கள், கவிஞர்கள், பேச்சாளர்கள், ஓவியர்கள் எனப்பலரையும் இனங்கண்டு வெளிக்கொணர்வதும் எமது நோக்கமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுவர் வாசிப்பு வட்ட நிர்வாகம் 2023

| | |
|---|---|
| 01.ஆ.தேனுஜன் | தலைவர் |
| 02.பி.கிருத்தியன் | உபதலைவர் |
| 03.ச.கிஷோன் | செயலாளர் |
| 04.த.அபிஷேக் | உபசெயலாளர் |
| 05.மோ.ஹரிவர்சன் | பொருளாளர் |
| 06.மோ.ஹரிலர்சன் | உறுப்பினர் |
| 07.கே.டோனிசன் | உறுப்பினர் |
| 08.கே.டினோசன் | உறுப்பினர் |
| 09.பா.விஸ்மிதன் | உறுப்பினர் |
| 10.பா.ஜஸ்வின் | உறுப்பினர் |
| 11.தி.தரணிகன் | உறுப்பினர் |
| 12.வி.ஆரூஜன் | உறுப்பினர் |
| 13.சு.ஆதீஷன் | உறுப்பினர் |
| 14.ப.கரிகரன் | உறுப்பினர் |
| 15.ப.பவித்திரா | உறுப்பினர் |
| 16.தி.கஜனன் | உறுப்பினர் |
| 17.ஜெ.தன்சிகா | உறுப்பினர் |
| 18.ஜெ.தருணிகா | உறுப்பினர் |
| 19.இ.டிலுக்சன் | உறுப்பினர் |
| 20.அ.அக்ஷயா | உறுப்பினர் |
| 21.கு.டிக்சின் | உறுப்பினர் |
| 22.ச.சத்சரன் | உறுப்பினர் |
| 23.எ.போல் நியூலியன் | உறுப்பினர் |
| 24.பி.கபினேஷ் | உறுப்பினர் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


1.இயற்கையை நேசிப்போம் 01

2.எங்கள் வாசிப்பு வட்டம் 02

3.எங்கள் வீட்டு பசு 04

4.எமது நூலகம் 05

5.எழுத்தாணியின் வரலாறு 06

6.என் கலை வாழ்வில் சித்திர வகுப்பு 08

7.என் பார்வையில் கோகுலம் 09

8.எனக்கு விருப்பமான விளையாட்டு 11

9.எனது பாடசாலை 12

10.எனது பாடசாலையில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டி 14

11.எனது வீட்டுத்தோட்டம் 18

12.சுற்றுலா 20

13.தொலைபேசியின் நன்மைகள் தீமைகள் 21

14.நான் விரும்பும் பெரியோர் 23

15.போதைப் பொருளை ஒழிப்போம் 24

16.முகிழ் சஞ்சிகை பற்றிய எனது விமர்சனம் 25

17.முத்திரை சேகரித்தல் 26

18.யாழ் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி 29

19.வீட்டு நூலகம் 30

20.வீரர்களின் போர் 31


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கையை நேசிப்போம்

இயற்கையை நேசிக்கும் மனிதர்களாகிய நாம் மகத்துவம் மிக்கவர்களாக இருப்போம் என்பது நிதர்சனம் ஆகும். நாம் வாழும் வீட்டில் ஒரு குட்டி நூலகத்தையும் ஒரு வீட்டுத் தோட்டத்தையும் வைத்திருப்போமானால் நமக்கு வேறெதுவும் தேவையில்லை.

பூமியில் உள்ள இயற்கை வளங்களை காப்பாற்றுவதற்கான சுற்றுச்சூழல் செயற்பாடு பற்றிய விழிப்புணர்வை மக்களுக்கு உலகலாவிய அளவில் கொண்டு வருவதற்காக ஐக்கிய நாடுகள் சபையால் 1972ம் ஆண்டு யூன் 5ம் திகதி சுற்றுச்சூழல் தினம் ஆரம்பிக்கப்பட்டது.

சுற்றுச் சூழலின் மகத்துவத்தை மக்கள் உணர்ந்த போதிலும் அதற்கு மாறாக இயற்கைக்கு பாதகம் விளைவிக்கும் மனித நடவடிக்கைகளால் சுற்றுச் சூழல் மாசடைகின்றது. அதாவது மிதமிஞ்சிய இரசாயனப் பயன்பாடு, பெரும்யுத்தம், வேலைகளை இலகுவாக்கும் நோக்கில் மனிதனால் கண்டறியப்பட்டு பயன்படுத்தப்படும் இயந்திரங்கள் அனைத்தும் இயற்கைக்கு கொடிய தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது.

வருங்கால சந்ததியினர் வளமுடன் வாழ்ந்திடும் வகையில் சுற்றுச்சூழல் அமைந்திருத்தல் அவசியமானதொன்றாகும். பொருளாதார வளர்ச்சிக்கு மட்டுமல்லாது சிறப்பான சுற்றுச்சூழலுக்கும் இயற்கைவளமே பிரதானம். எனவே இயற்கையைப் பாதுகாத்து சுற்றுச்சூழலைப் பேணுவோம்.

**வி.ஆருயன்**
**யா / இந்துக் கல்லூரி**
**தரம் : 6**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் வாசிப்பு வட்டம்

சுன்னாகம் பொது நூலகத்தில் அங்கத்தவர்களாக இருக்கக் கூடிய சிறுவர்களை இணைத்து 12.11.2021 அன்று சிறுவர் வாசிப்பு வட்டம் ஆரம்பிக்கப்பட்டது. சிறுவர்களிடையே தலைவர், செயலாளர், பொருளாளர் என நிர்வாகத் தெரிவு செய்யப்பட்டு சிறப்பாக இயங்கி வருகின்றது. ஒன்றுவிட்ட வெள்ளிக்கிழமைகளில் சந்திப்புக்களை மேற்கொள்ள முயற்சிகள் செய்த போதிலும் தனியார் கல்வி நிலைய வகுப்புக்கள் காரணமாக மாதம் ஒருநாள் வாசிப்பு வட்டத்தினரின் சந்திப்பு நடைபெற்று வருகின்றது.

சித்திரை 2ம் திகதி உலக சிறுவர் புத்தக தினத்தை முன்னிட்டு எமது வாசிப்பு வட்டச் சிறுவர்கள் அனைவரதும் ஆக்கங்களையும் தாங்கி "முகிழ்" என நாமம் சூட்டி எமது வாசிப்பு வட்டத்தினரின் முதலாவது சஞ்சிகை 05.04.2022 அன்று வெளியீடு செய்யப்பட்டதுடன் எமக்கான சீருடையும் வழங்கப்பட்டது.

எமது வாசிப்பு வட்டத்தினரின் சந்திப்புக்களில் கவிதை, கதைகூறல், புத்தக வாசிப்பு, பொது அறிவு சார்ந்த வினாக்களை வினாவி விடை காணல், விளையாட்டு எனப் பல்சுவை நிகழ்வுகளாக நகர்ந்து செல்கின்றது. மேலும் நீண்டகாலம் பரீட்சயமின்றிப்போன முத்திரைகளை மீண்டும் நினைவுபடுத்தி சிறுவர்களிடையே முத்திரை சார்ந்த ஆர்வத்தை இவ்வாசிப்பு வட்டமானது மீண்டும் கட்டியெழுப்பி உள்ளது. மேலும் நூலகத்தில் நடைபெறுகின்ற நவீன தொழில்நுட்ப இலவச வகுப்புக்களில் எம்மவர்கள் இணைந்து பயன் பெற்றுக் கொண்டிருக்கின்றார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

நூலக நிகழ்வுகளில் தேவாரம், தமிழ்மொழி வாழ்த்து, கலை நிகழ்வுகள் என்பவற்றை இவ்வாசிப்பு வட்டச் சிறார்களே வழங்கி வருகின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2023ம் ஆண்டிற்கான புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டு செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. புதிய பல செயற்பாடுகளுடன் எமது வாசிப்பு வட்டம் நகரும் என்பதில் ஐயமில்லை.

**சு.ஆதீஷன்**

**யா/கொக்குவில் இந்துக் கல்லூரி**

**தரம்:- 10**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் வீட்டு பசு

எனது செல்லப் பிராணி பசு ஆகும். அதற்கு நாங்கள் மீனாட்சி என்று செல்லப் பெயர் வைத்து அழைக்கின்றோம். அதற்கு தினமும் தண்ணீர் வைப்போம் நன்றாக குடிக்கும். மீனாட்சி புல் , வைக்கோல், தவிடு,புண்ணாக்கு போன்று தினமும் வித விதமான உணவையும் சாப்பிடும். நேரம் பிந்தினால் மீனாட்சி கோபம் வந்து கத்தி கொண்டு இருக்கும். அம்மம்மா கிட்ட போய் சத்தம் போட வேண்டாம் என்றால் இடிக்க வரும். இரண்டு முறை கன்று ஈன்று பால் தந்தது. மிகவும் சுவையானது. நாங்கள் விரும்பி குடித்தோம். தினமும் பால் குடித்தால் உடம்பிற்கு சக்தி கிடைக்கும். பசுவிற்கு தைமாதத்தில் பட்டிப்பொங்கல் செய்வோம். பசுவை கோமாதாவாக வழிபடுவோம். மீனாட்சி தினமும் சாணம் போடும் அதை நானும் தாத்தாவும் அள்ளிப் போடுவோம். தாத்தாவின் மோட்டார் சைக்கிள் சத்தம் கேட்டதும் நல்ல குரல் எழுப்பும் தனக்கு பசிக்குது என்று, தாத்தாவும் ஓ..ஓ.. என்று சொல்லுவார். நானும் தாத்தாவுக்கு பின்னால் சைக்கிளில் செல்லுவேன். இப்ப என்னுடன் தங்காவும் வருவா, உம்பா ம்மா... என்று கத்துது என்று சொல்லுவா.



பசுவை வளர்ப்பதால் எல்லோருக்கும் மிக்க மகிழ்ச்சி. பசுவின் சாணகத்தை எருவாக்கி தோட்டத்தில் பாவிப்பார்கள்.

**கு.டக்சின்**
**யா/ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தியாசாலை**
**தரம் : 2**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது நூலகம்

1. எமது நூலகம் சுன்னாகத்தில் அமைந்துள்ளது.

2. உன் விடியலுக்கான வினோத சூரியன் உதிக்கும் இடம் நூலகம்.

3. புத்தக இரத்தினங்களால் கட்டப்பட்ட ஸ்தலம் எங்களது நூலகம்.

4. காகித முத்துக்களை சுமந்து நிற்கும் அமைதிக் கடல் எங்களது நூலகம்.

5. உன்னையே உனக்கு அறிமுகம் செய்யும் இன்னொரு தாய் எங்களது நூலகம்.

6. எமது நூலகத்தில் புத்தகங்களும் சிறுவர்களும் புனிதமானவை.

7. உன்னை புத்தனாக, புலமைப் பித்தனாக அல்லது சித்தனாக ஆக ஏதோ ஒன்றாக மாற்றும் சிறந்த சிற்பி.

8. நூலகம் என்பது கடல் , இதில் மூழ்கினால் முத்தெடுக்கலாம் கரையில் நின்றால் கிளிஞ்சல்களைத் தான் காணலாம்.

9. எமது சுன்னாகம் பொது நூலகம் சிறுவர்கள் தம்மை உலகறிய செய்யும் ஒரு பொக்கிசமாக விளங்குகின்றது.

**கே. டோனிசன்**
**யா/ சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை**
**தரம் - 4**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுத்தாணியின் வரலாறு

இன்று பந்துமுனைப் பேனாவை நாம் அதிகம் பயன்படுத்துகின்றோம். பயன்பாட்டிற்கு பின் அதிலுள்ள மை தீர்ந்தபின் தூக்கி எறிந்து விடுகிறோம். சில ஆண்டுகளுக்கு முன் மை நிரப்பிய குழாய் பேனாவை பயன்படுத்தினோம். அதற்கு முன்னர் மைக்கூடு தனியாகவும் மைக்கூட்டில் இருக்கும் மையைத் தொட்டுத்தொட்டு எழுதும் பேனாவையும் பயன்படுத்தி வந்தோம்.

பழங்காலத்தில் பாறை மற்றும் குகைச்சுவர்களில் கற்களால் தேய்த்து எழுத்தைப் படைத்தனர். பின்னர் பச்சிலைச் சாறுகளைக் கொண்டு கோடுகளும் குறியீடுகளும் படைத்தனர். அதன் தொடர்ச்சியாக ஓவியங்களாகவும் எழுத்துக்களாகவும் வரைந்தனர். செப்பேடுகளும் தங்கத்தகடுகளும் எழுதப் பயன்பட்ட காலத்தில் செம்பொன்ஊசி எழுதுகோலாக பயன்பட்டது.

“அரும்பொனும் மணியும் முத்தும் காணமும் குறுணி ஆகப் பரந்த எலாப் பிரப்பும் வைத்துப் **பைம்பொன் செய்தவிசின் உச்சி இருந்து பொன்ஓலை செம்பொன் ஊசியால் எழுதி** ஏற்பத் திருந்து பொன்கண்ணி யாற்குச் செல்வியைச் சேர்த்தினாரே” என சீவகசிந்தாமணி குறிப்பிடுகிறது. எகிப்தில் நைல் நதிக்கரையிலுள்ள சதுப்பு நிலங்களில் வளரக்கூடிய நீர்த்தாவரம் பேப்பரைஸ் எனப்படும் இதனைப் பதப்படுத்தியபின் நாணல் தண்டைப் பயன்படுத்தி எழுதுபடுபொருளாக கொண்டு மை தொட்டு எழுதிய ஆவணங்கள் இன்றளவும் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

மைசூர் பகுதியில் வாழ்ந்த வணிகர்கள் தங்களது அன்றாட வரவு செலவுகளை எழுத துணிகளை பயன்படுத்தினார்கள். இதற்கு பருத்தி துணிகளை ஒரே அளவில் நறுக்கி அத்துணிகளை அரைத்து எடுக்கப்பட்ட புளியங்கொட்டை பசையுடன் விளக்குக்கரி சேர்த்து பூசிய பிறகு காயவைத்து அதில் சுண்ணாம்புக் கட்டிகளை கொண்டு எழுதினார்கள். இதனை ‘கடுத்தா’ என்று அழைத்தனர். இன்றும் கர்நாடக அருங்காட்சியகங்கள் சிருங்கேரிமடம் போன்ற இடங்களில் கடுத்தா காணப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவையெல்லாம் ஆரம்பகாலகட்டங்களில் எழுதுபொருளாகவும் எழுதுபடுபொருளாகவும் பயன்பட்டது. இதனை பயன்படுத்துவதும் பராமரிப்பதும் கடினமாகையால் இவற்றுக்கெல்லாம் சரியான தீர்வாக கண்டறியப்பட்டதே பனைஓலை சுவடியாகும்.

இவ் ஓலைகளில் எழுதுவதற்கு பயன்பட்ட கூரியஊசி குறித்து சங்கநூல்களும் சிந்தாமணியும் குறிப்பிடுகின்றது. நெடுங்காலமாகவே இவ்வாறு எழுதப் பயன்பட்ட பொருள் எழுத்தாணி என்ற சொல் கொண்டு அழைக்கப்பட்டது. முதன்முதலாக எழுத்தாணி என்ற சொல்லை ஏலாதி எனும் நூல்தான் குறிப்பிடுகிறது.

இந்த எழுத்தாணி பலவகையில் காணப்படுகிறது. குண்டெழுத்தாணி, குடைவெழுத்தாணி, வாரெழுத்தாணி, மடக்கெழுத்தாணி, மடிப்பெழுத்தாணி, கணைஎழுத்தாணி, அகலெழுத்தாணி, தேரெழுத்தாணி என்பனவாகும்.

இன்றுபோல் அன்று எழுதுவதற்கு தாழ் கிடையாது. எழுதப் பயன்பட்டவை பனைஓலைகள் தான். இதற்கு பயன்பட்ட பனைஓலைகள் தாளிப்பனை, கூந்தல்பனை என்பனவாகும். இவற்றில் எழுத இரும்பால் செய்யப்பட்ட கூரியமுனை கொண்ட எழுத்தாணிகள் தயாரிக்கப்பட்டன. இவைதான் அன்றைய நிலையில் மிக அதிக அளவில் எழுதப் பயன்பட்ட பொருட்கள் ஆகும்.

எழுத்தாணி கொண்டு எழுதுபவருக்கு எழுத்தசசன் என்று பெயர். ஒரே நூலினை பலபடிகள் எடுப்பதற்கு பல்வேறு நபர்கள் ஊழியம் பெற்று ஓலையில் எழுதி வந்தனர். அவ்வாறு எழுதக்கூடிய மனிதர்கள் குறிப்பிட்ட பகுதியிலேயே வாழ்ந்து வந்தனர். அப்பகுதி எழுத்துக்காரத்தெரு என்றே அழைக்கப்பட்டது. இன்றளவும் தஞ்சை மாவட்டம், மாரியம்மன் கோவில் பகுதியில் எழுத்துக்காரத்தெரு என்ற பெயருடன் தெரு ஒன்று உள்ளது. இப்பெயரால் நாம் அறிவது எழுத்தாணி மறைந்தாலும் அப்பெயர் கொண்டதெரு தற்பொழுதும் நின்று நிலைத்துள்ளது.



**அ.தேனுஜன்**

**யா/ஸ்கந்தவரோதயா கல்லூரி**

**தரம் 10**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் கலை வாழ்வில் சித்திர வகுப்பு

1. நான் சித்திரம் கற்பதற்காக சுன்னாகம் பொதுநூலகத்தில் நடைபெறும் சித்திர வகுப்பிற்கு செல்கின்றேன்
2. வாரத்தில் செவ்வாய் வெள்ளிக்கிழமைகளில் இவ்வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
3. இங்கு பல மாணவர்கள் வருகை தருகின்றனர். நாம் இங்கு இலவசமாக கற்கின்றோம்.
4. நூலகம் ஓர் அமைதியான இடமாக இருப்பதனால் எம்மால் நன்றாக கற்க முடிகின்றது.
5. எமது ஆசிரியர் மிகவும் நன்றாக கற்பிக்கின்றார்.
6. படங்கள் வரைவது வர்ணம் தீட்டுவது தொடர்பான நுட்பங்களை எமது ஆசிரியர் சிறப்பாக சொல்லித் தருகின்றார்.
7. ஆசிரியரின் சிறந்த வழிகாட்டல் மூலம் என்னால் நன்றாக படம் வரைந்து வர்ணம் தீட்ட முடிகின்றது.
8. நான் பாடசாலையில் நடைபெறும் சித்திரப் போட்டிகளில் பங்குபற்றி பரிசில்களைப் பெறுகின்றேன்.
9. நான் சித்திரத்தை சிறப்பாக கற்று புகழ்பெற்ற ஓவியனாக வர விரும்புகின்றேன்.

**இ.டிலுக்ஷன்**

**யா/நாகேஸ்வரி வித்தியாசாலை**

**தரம் 05**









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் பார்வையில் கோகுலம்

வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான். இந்த வாசிப்பானது சிறியோர் முதல் பெரியவர் வரை அனைவருக்கும் அவசியமான ஒன்று. வாசிப்பு என்பது கருத்தூன்றி ஒரு நூலை வாசித்தல் ஆகும். நாம் சிறுவயதிலிருந்து எழுத்துக்களை வாசித்து அதன்பின் சொற்களை வாசித்து தொடர்ந்து பாடங்களைப் படிக்க வாசிப்பு மிக முக்கியமான இடத்தைப் பெறுகின்றது.

வாசிப்பு இல்லையானால் கற்றலில் மிகப்பெரிய இடர்பாடான நிலை உண்டாகின்றது. பாடப் புத்தகத்தை விளங்குவதோ ஆசிரியரைச் செவிமடுப்பதோ என்னவாக இருப்பினும் கற்றல் நடவடிக்கைக்கும் வாசிப்பு மிக முக்கியமாக உள்ளது. அதுமட்டுமன்றி எமது பரந்துபட்ட அறிவினை மேம்படுத்தவும் வாசிப்பு உதவுகின்றது. இந்த வாசிப்பினை மேம்படுத்துவதற்கு நூலகங்கள் பெரிதும் எமக்கு உதவுகின்றது.

நான் வாசித்த புத்தகங்களில் மிகவும் பயனுள்ளதாக "கோகுலம்" என்ற சஞ்சிகை மிளிர்கின்றது. குழந்தைகளின் குதூகலம் என இந்நூல் வர்ணிக்கப்படுகின்றது. இந்நூலில் நகைச்சுவைக் கதைகள், வரலாற்றுக் கதைகள், சஞ்சிகைகள், அறிவியல், உலகியல் என பற்பல விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன.

திகில் கதைகள், சாகசக் கதைகள், விஞ்ஞானிகளின் கண்டுபிடிப்பு பற்றிய விளக்கங்கள் போன்று பல அம்சங்களைக் கொண்டுள்ளது. இந்நூலை வாசிக்க வாசிக்க அலுப்பே வராது. ஏனெனில் அவ்வளவு சுவாரஷ்யமான விடயங்கள் உள்ளன. இதுமட்டுமின்றி விளையாட்டுக்களின் வரலாறுகள், விளையாட்டுத்துறை சார்ந்த தகவல்களும் இடம்பெறுகின்றது.

இவைதவிர சாகசங்கள் நிறைந்த "மூன்று நண்பர்கள்" தொடரும் காணப்படுகின்றது. உணவுகள் மற்றும் சிற்றுண்டிகள் செய்யும் முறையினை அழகிய படங்களுடன் தந்துள்ளனர். பல்வேறுபட்ட நாடுகளின் புகழ்பெற்ற சுற்றுலாத் தளங்களையும் அவற்றின் சிறப்புக்களையும் தந்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இவையனைத்திற்கும் மேலாக நூலகம் வருவது மகிழ்வூட்டும் களமாக அமைகிறது. மேலும் மேலும் நூல்களை வாசிக்க வேண்டும் என்ற அவா அதிகமாகி உள்ளது. "ஒரு உண்மையான வாசகன் வாசிப்பை முடிப்பதில்லை" என ஆஸ்கார் வைல்ட் கூறியுள்ளார். அதுபோல் வாசிப்பால் நம் அறிவை வளர்த்து நற்பிரஜையாகி நல்வாழ்வு வாழ்வோமாக.

எ.போல் நியூலியன்

யா/ஸ்கந்தவரோதய கல்லூரி

தரம்:- 09






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனக்கு விருப்பமான விளையாட்டு

எனக்கு விருப்பமான விளையாட்டு துடுப்பாட்டம் ஆகும். துடுப்பாட்டத்திற்கு ஓர் அணியில் 11 வீரர்கள் விளையாடுவார்கள். துடுப்பாட்டம் என்பது மட்டையும் பந்தும் வைத்து விளையாடப்படும் ஓர் விளையாட்டாகும். எனது பாடசாலை மற்றும் யா/மத்திய கல்லூரி என்பவற்றுக்கிடையில் இத் துடுப்பாட்டப் போட்டியானது பெரும்போர் என்று பெயரிடப்பட்டு வருடாவருடம் நடைபெறுவதும் குறிப்பிடத்தக்கது.

துடுப்பாட்டமானது டெஸ்ட் போட்டி, ஒருநாள் போட்டி, T20 போட்டி என பல அளவுகளில் காணப்படுகின்றன. இத் துடுப்பாட்டமானது ஆண், பெண் இருபாலாராலும் விளையாடப்படும் ஒரு விளையாட்டாக காணப்படுகின்றது.

இத் துடுப்பாட்ட விளையாட்டானது போட்டிகளாக இரு கழகங்களுகிடையிலும், இரு நாடுகளுக்கிடையிலும், பல நாடுகளுக்கிடையிலாகவும் ஒரு குறிப்பிடப்பட்ட கால இடைவெளியில் நடைபெற்று வருகின்றது. இன்றைய காலங்களில் பாடசாலைகளின் வருடாந்த இல்ல வியைாட்டுப் போட்டிகளிலும் இப்போட்டிகள் இடம்பெறுவதனை காணலாம்.

இவ்விளையாட்டானது உலகளவில் மிகவும் பிரசித்திபெற்ற விளையாடடுக்களில் ஒன்றாகக் காணப்படுகின்றது. நான் மாலை நேரத்தில் இவ்விளையாட்டைட் விளையாடுவேன்.

**பி.கபினேஸ்**

**யா/சென்ஜோன்ஸ் கல்லூரி**

**தரம்:- 04**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது பாடசாலை

## (யா/மகாஜனக் கல்லூரி)

மாணவர்களுக்கு அறிவையும், நற்பண்புகளையும் அள்ளி வழங்கும் இடமாக பாடசாலை விளங்குகின்றது. குழந்தைகளாக உலகம் அறியாதவர்களாக பாடசாலைக்குள் உட்புகும் பிள்ளைகள் அனைத்து ஆற்றலும் கைவரப் பெற்றவர்களாக பாடசாலையை விட்டு வெளியேறுகின்றனர். அத்தகைய சிறப்பு வாய்ந்த எனது பாடசாலையான யா/மகாஜனக் கல்லூரி பற்றி கூறப் போகின்றேன்.

எனது பாடசாலை அழகியதொரு பாடசாலையாகும். சுற்றிவரப் பூஞ்செடிகள் பூத்துக் குலுங்க பார்ப்பவர்களைக் கவர்வதாக சூழல் காணப்படுகின்றது. பாடசாலை நுழைவாயிலின் இரு மருங்கிலும் உயர்ந்து ஓங்கிய மரங்கள் நிழலை பரப்பியவாறு வளர்ந்திருக்கின்றன. அதன் உட்புறம் நடைபாதையின் இருமருங்கிலும் மஞ்சள் மற்றும் சிவப்பு நிறப் பூக்கள் அந்த இடத்தையே இரம்மியமாக மாற்றியிருந்தன. இயற்கை அழகிற்கு மேலதிகமாக, சுத்தத்திலே அதிசிறந்து விளங்கும் இடமாக எனது பாடசாலை விளங்கியது. எப்போதும் எனது பாடசாலை முற்றங்கள் குப்பை எதுவும் அற்றனவாக பெருக்கப்பட்டு தூய்மையாகக் காணப்படும்.

ஆங்காங்கே குப்பைக் கூடைகள் வைக்கப்பட்டு அதற்குள் மட்டுமே குப்பைகளை இடுமாறு அறிவுறுத்தலும் வைக்கப்பட்டிருக்கின்றது. பொலித்தீன் மற்றும் உக்கக் கூடிய குப்பைகள் என அவற்றின் மேல் ஒட்டப்பட்டிருந்தன. மாணவர்கள் குப்பைகளை குப்பைக் கூடைக்குள் போடுவதற்குப் பழக்கப்பட்டிருந்தமையினால் வகுப்பறைகள் அனைத்தும் எப்போதும் குப்பைகள் இன்றி எப்போதும் சுத்தமாகக் காணப்படும். எனது பாடசாலையானது இயற்கையைப் பாதுகாப்பதில் மிகச் சிறந்த பாடசாலையாகக் காணப்படுகின்றது.

பச்சைப் பசேலெனக் காணப்படும் விளையாட்டு மைதானம் மற்றும் அழகான ஓரளவு பெரிய தோட்டத்தையும் கொண்டு காணப்படும். மாணவர்களால் அமைக்கப்பட்ட அந்தத் தோட்டத்தில் பூசணி, கத்தரி, மிளகாய், வெண்டி, பாகல் போன்ற மரக்கறி வகைகளும் பலா, தோடை, மா, மாதுளை, வாழை போன்ற கனி தரும் மரங்களும் காணப்படுகின்றன. பாடசாலைக்கு சமூகமளிப்பவர்கள் அனைவரும் வியந்து பார்க்கும் வகையில் அழகான தோற்றமுள்ள பாடசாலை ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பாடசாலையானது கிராமப்புறத்தில் அமைந்திருந்தமையால் எப்போதும் அமைதியான சூழலும் சுத்தமான காற்றும் போதியளவு சூரிய ஒளியும் இயற்கையாகவே காணப்பட்டது. உயர்ந்த மாடிகளைக் கொண்ட கட்டடங்கள், சுத்தமாகப் பராமரிக்கப்பட்டு நீல வர்ணம் தீட்டப்பட்டுள்ளது. பாடசாலையின் ஒரு பகுதியில் ஆண்கள் பெண்களுக்கென தனித்தனியாக மலசல கூடங்கள் அமைக்கப்பட்டு அவையும் சுத்தமாகவும், சீராகவும் பராமரிக்கப்படுகின்றன.

பாடசாலை அதிபர் ஆசிரியர்கள் சுத்தம் பேணுதலில் அதிகூடிய அக்கறை செலுத்தியமையினால் மாணவர்களும் அதற்கேற்றவாறு பழக்கப்படுத்தி இருந்தனர்.வெறுமனே ஒரு பாடசாலையை அதிபர் மற்றும் ஆசிரியர்களால் மட்டும் அழகாக ஆக்கிவிட முடியாது. மாணவர்கள் பெற்றோர்கள் மற்றும் நலன் விரும்பிகளும் இதற்கு பங்களிப்பு செய்திருந்தார்கள். ஒரு பாடசாலை எவ்வாறு இருக்க வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக காணப்பட்ட இப்பாடசாலையில் படிப்பதற்கு எனக்கு மிகவும் பெருமையாக உள்ளது.

**ப.பவித்திரா**

**யா/மகாஜனக் கல்லூரி**

**தரம் 07**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எனது பாடசாலையில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டி

எனது பாடசாலையில் விளையாட்டுப் போட்டியானது 09.02.2023ம் திகதியன்று அனைவரும் வியக்கத்தக்க வகையில் சிறப்பாக இடம்பெற்றது. பாடசாலை மைதானத்தில் சிறப்பாக நடைபெற்றது. இவ்விளையாட்டுப் போட்டியானது அனைத்துப் பாடசாலையிலும் பொழுது போக்கிற்காகவும், மாணவர்களை மகிழ்ச்சிப் படுத்துவதற்காகவும், அவர்களது திறமைகளை வெளிக் கொணர்வதற்காகவும் நிகழ்த்தப்படுகின்ற நிகழ்வு ஒன்றாகும்.

எமது பாடசாலையில் மாணவர்கள் அனைவரையும் ஒன்றுகூட்டி ஐந்து இல்லங்களாகப் பிரித்து ஒவ்வொரு இல்லமும் தனித்தனியாக விளையாட்டுப் போட்டி தொடர்பான கலந்துரையாடலில் ஈடுபட்டன. எமது பாடசாலை ஆசிரியர்களையும் ஐந்து இல்லங்களாகப் பிரித்து மாணவர்களின் செயற்பாட்டிற்கு துணைபுரிந்தனர். இல்லங்களில் இல்லத்தலைவன், இல்லத்தலைவி, செயலாளர், பொருளாளர் என பல்வேறு பதவிகளைப் பொறுப்பேற்று செயற்படத் தொடங்கினர். மாணவர்களின் ஆலோசனைப்படி யார் எந்த விளையாட்டில் ஆர்வம் உள்ளார்களோ அவர்கள் அந்தந்த விளையாட்டுக்களுக்கு தெரிவுசெய்யப்பட்டு களமிறக்கப்பட்டனர்.

பல்வேறு விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெற்றன. குறிப்பாக குண்டு போடுதல், தட்டெறிதல், அஞ்சலோட்டம், கயிறு இழுத்தல் போன்ற நிகழ்வுகளும் இடம்பெற்றன. இதில் முதல் மூன்று இடங்களில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சிறப்புரிமை வழங்கப்பட்டது. இலைமறை காயாக தமது திறமைகளை அறியாதிருந்த மாணவர்களுக்கு இதுவொரு வாய்ப்பாக அமைந்தது. மாணவர்கள் தமது இல்லங்களை வெற்றி பெறச் செய்வதற்காக ஆர்வத்துடனும், உற்சாகத்துடனும் போட்டிகளில் கலந்து கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை அனைத்தும் விளையாட்டுப் போட்டிக்கு முன்தினமே இனிதாக நிறைவேறியது எனலாம்.

விளையாட்டுப் போட்டி தினத்தன்று இல்லங்கள் வடிவமைக்கப்பட்டு மாணவர்களின் பங்களிப்புடன் அலங்கரிக்கப்பட்டது. மதியம் 1மணியளவில் அதிபர் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டு திரு.அசோக் அவர்கள் விருந்தினராகவும் பங்கேற்று மங்கள வாத்தியம் இசைக்கப்பட்டு அணிநடை வகுப்போடு அழைத்து வரப்பட்டு மங்கள விளக்கேற்றி இனிதே ஆரம்பிக்கப்பட்டதுடன் மாணவர்களில் வீர வீராங்கனைகள் ஒவ்வொரு இல்லத்தில் இருந்தும் ஒருவர் ஒலிம்பிக் தீபத்தை ஏற்றினர்.

அதன் பின்னர் விளையாட்டுக்கள் ஆரம்பிக்கப்பட்டு அஞ்சலோட்டம், கயிறு இழுத்தல் போன்ற சில போட்டிகளின் இறுதிப் போட்டிகளும் நடைபெற்றன. அனைவரது கண்களை கவரும் வகையில் சிறப்புற போட்டிகள், இல்லங்களின் அமைப்புக்கள் அமைந்திருந்தன. பழைய மாணவர்களுக்கான விளையாட்டுக்களும் இடம்பெற்றன. இதனைத் தொடர்ந்து வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டது.

மாணவர்களுக்கான பரிசில் வழங்கலைத் தொடர்ந்து இல்லங்களுக்கான பரிசு இல்லங்களுக்கான முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்கள் வழங்கப்பட்டன. மாணவர்கள் இவற்றால் மகிழ்ச்சியில் குதூகலித்தனர்.

இவ்விளையாட்டுப் போட்டியானது மாணவர்களை அடுத்த கட்டத்திற்கு நகர்வதற்கு துணைபுரிந்தது கோட்டம், வலயம், மாகாணம் போன்றவற்றில் கலந்து வெற்றிபெற அடித்தளமிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விளையாட்டுப் போட்டியானது மாணவர்களிடத்தில் உற்சாகத்தினையும், வெற்றி தோல்விகளை சமமாக மதிக்கும் மனப்பாங்கினையும் மனதில் ஏற்படுத்துகின்றது.

ச.கிசோன்

யா ஸ்கந்தவரோதயாக் கல்லூரி
தரம் - 09







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பா.ஜஸ்வின்

யா/நாகேஸ்வரி வித்தியாசாலை

தரம் - 01



ஜெ.தருணிகா

சிவன் முன்பள்ளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது வீட்டுத்தோட்டம்

அன்றாடம் நாம் அதிகளவான நேரத்தை விளையாட்டு, தொலைக்காட்சி, தொலைபேசி என்பவற்றில் செலவிடுகின்றோம். ஆனால் வீட்டுத்தோட்டம் அமைத்தல் என்பது சிறந்த பொழுதுபோக்காகவும் மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாடாகவும் அமைகிறது.

எனது வீட்டுத்தோட்டத்தை நான் மிகவும் அழகாக அமைத்தேன். அதில் மரக்கறிச்செடி, கொடி, பழமரங்கள், அலங்காரப்பூக்கள் என்பவற்றை நட்டேன். இத் தோட்டத்தை கொரோனா காலத்தில் தொடங்கி இன்றுவரை நான் செய்கிறேன்.

எனது வீட்டுத்தோட்டம் மூலம் பலநன்மைகளைப் பெற்றுக்கொண்டேன். மேலதிக வருமானம் புத்தம் புதிய காய்கறிகள் உடற்பயிற்சியாக அமைந்தது மற்றும் மனமகிழ்வு எனது வீட்டுத்தோட்டத்தை மேலும் அழகுபடுத்த மரஇருக்கைகள், நீர்த்தடாகம், பறவைகளுக்கான உணவுப்பாத்திரம் போன்றவற்றை அமைத்தேன்.

எனது வீட்டுத்தோட்டத்தில் அன்றாடம் பல பறவைகள் வருகை தருகிறது. அந்தக்காட்சி எனது வீட்டுத்தோட்டத்திற்கு மிகவும் அழகைத் தருகிறது. மேலும் எனது வீட்டுத்தோட்டத்தின் அளவை பெரிதாக்கி பலபயிர்களை நட்டேன்.

எனது வீட்டுத்தோட்டத்தில் உள்ள எஞ்சிய மரக்கறிகளை பயிர்களுக்கு கூட்டுப்பசளைக்காகவும் சேர்த்தேன். கோழி, மாடு போன்ற விலங்குகளை வளர்த்தேன். எனது வீட்டுத்தோட்டத்தில் விளையும் மேலதிக பழங்கள் காய்கறிகளை ஏழை மக்களுக்கும் கடைகளுக்கும் இலவசமாகக் கொடுக்கிறேன்.

எனது வீட்டுத்தோட்டம் பற்றி அறிந்த எனது ஆசிரியர் என்னை வழிப்படுத்தி நீ மேலும் விதவிதமான மரங்களை நட்டு ஒரு சிறந்த பொழுதுபோக்காக்கி கொள்ள வேண்டும் என்று என்னை பாராட்டினார்.

எனது வீட்டுத்தோட்டத்தால் பல நன்மைகளை பெற்றுக்கொண்டேன். எனது வீட்டுத்தோட்டத்தை சுற்றி ஒரு பந்தல் போன்று அமைத்து அதை அழகுபடுத்தினேன். மேலும் அலங்காரப்பூக்கள் அவற்றிலிருந்து கன்றுகளை உருவாக்கி விற்கின்றேன். மேலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது வீட்டுத்தோட்டத்தை இன்னும் சிறப்பாக செய்வதற்கு நான் முயற்சிக்கின்றேன்.

**தி.தரணிகன்**
**யா / ஸ்கந்தவரோதயாக் கல்லூரி**
**தரம் - 09**









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுற்றுலா

நான் கடந்த 12.02.2023 அன்று காலை 6மணியளவில் எனது பெற்றோருடனும் குடும்ப உறவினருடனும் மன்னார் மாவட்டத்தின் சில வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைப் பார்வை இடுவதற்காக சென்றிருந்தேன்.

மிகவும் பரந்துபட்ட வயற்பாங்கான சூழல் எனக்கு பார்ப்பதற்கு கண்கொள்ளாக்காட்சியாக இருந்தது. காலை உணவை உட்கொண்டபின் மன்னாரில் உள்ள பழமையான கோட்டை ஒன்றை பார்வையிட்டோம். அது மிகவும் பழமை வாய்ந்த போர்த்துக்கேயரால் கட்டப்பட்ட கோட்டையாகும்.

அதன்பின் பள்ளிமுனை நோக்கி சென்றோம். அங்கு பள்ளிமுனை வீதியிலுள்ள பெருக்க மரத்தை பார்வையிட்டோம். என்னைப் போல் பலபேர் பெற்றோருடன் பார்வையிட வந்திருந்தார்கள். அம் மரம் ஆனது 800 வருடங்களுக்கு மேல் பழமை வாய்ந்தது ஆகும். இம்மரம் ஆனது ஒல்லாந்தர்களால் ஒட்டகத்துக்கு உணவாக கொண்டுவரப்பட்ட பழத்தின் விதையில் இருந்து முளைத்ததாக கூறப்படுகின்றது.



அதன்பின் திருஞானசம்பந்தரால் பாடல்பெற்ற தலமான மாதோட்டத்தில் அமைந்துள்ள திருக்கேதீச்சரத்திற்கு சென்று அங்குள்ள திருக்கேதீச்சரநாதரையும் சக்தியான கௌரிஅம்பாளையும் வணங்கி பின் யாழ்ப்பாணம் நோக்கி வந்து பழைய பூங்கா என்று அழைக்கப்படும் சுப்பிரமணிய பூங்காவை நாம் வந்தடைந்தோம். அங்கு சிறுவர்களாகிய நாங்கள் ஒன்று சேர்ந்து விளையாடி மாலைப்பொழுதைக் கழித்து புது அனுபவங்களையும் புதிய தகவல்களையும் கற்று வீடு வந்தடைந்தோம்.

**அ. அக்ஷியா**

**யா/ சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை**
**தரம் - 4**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொலைபேசியின் நன்மைகள் தீமைகள்

நவீன விஞ்ஞான வளர்ச்சியில் முக்கிய இடம் வகிப்பவற்றில் தொலைபேசியும் ஒன்றாகும். இன்று நாம் உலகினை தொலைபேசி யுகம் என்று சொல்வது மிகையாகாது. இத்தொலைபேசியானது மனித வாழ்வில் உணவு, உடை, உறையுள் என்பவற்றுக்கு அடுத்தபடியாக விளங்குகிறது. இதன்மூலம் உரையாடுவது மட்டுமல்லாமல் செய்திகள் அனுப்புவதற்கும் உதவுவது கைத்தொலைபேசிகளாகும். இத்தொலைபேசியில் நாம் பயன்படுத்துகின்ற விடயத்தைப் பொறுத்தே அவை எமக்கு நன்மை தருவனவாகவும், தீமை பயப்பனவாகவும் அமைகின்றன எனலாம்.

கைத்தொலைபேசியானது செய்திகள் அனுப்புவதற்கும், ஒளிப்படங்கள் எடுப்பதற்கும், ஒளிப்படங்களை இன்னொருவருக்கு அனுப்புவதற்கும், செய்திகள் மற்றும் பாடல்கள் கேட்பதற்கும் விளையாட்டுக்களை விளையாடவும் கூடப் பயன்படுத்தப்படுகின்றது. கடந்த காலங்களில் உலகில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையில் வீடுகளில் இருந்த மக்களுக்கு முக்கியமான பொழுதுபோக்கு சாதனமாக விளங்கியது. பாடசாலைகள் மூடப்பட்ட நிலையில் அதனை ஈடுசெய்ய கைத்தொலைபேசி மூலம் வகுப்புக்கள் நடாத்தப்பட்டன. அதுமட்டுமின்றி இக்காலகட்டத்தில் உலகில் அனைத்து மக்களதும் தொழில் நடவடிக்கைகள் கைப்பேசிகள் மூலம் மேற்கொள்ளப்பட்டன.

இத் தொலைபேசியானது ஸ்கொட்லாந்து நாட்டினைச் சேர்ந்த அலெக்சான்டர்கிரகம்பெல் என்பவரால் உரையாடுவதற்காக கண்டுபிடிக்கப்பட்டது. எனினும் இதனுடைய அதீத வளர்ச்சி உலகையே சுருக்கி ஒருநொடிப் பொழுதில் மனிதனது தேவைகளை பூர்த்தி செய்கின்றது. மனித மூளையில் சேமிக்கப்படுகின்ற அனைத்து விடயங்களும் கைத்தொலைபேசிகளில் சேமிக்கப்படுகின்றன. இக்கைத்தொலைபேசியானது தொலைக்காட்சி, வானொலி, தொலைநகல், இணையவழிக் கற்கைநெறிகள் போன்ற தனித்தனித் துறைகளை ஒருங்கே இணைத்து தன்னகத்தே கொண்டுள்ளது.

இவ்வாறான நன்மைகள் இருந்தாலும் தொலைபேசிகளால் தீமைகளும் இருக்கத்தான் செய்கின்றன. இத்தொலைபேசிகளை அதிகமாக உபயோகிப்பவர்களுக்கு மூளை சம்பந்தமான நோய்கள் ஏற்படுகின்றன. உறக்கம் தொடர்பிலான பிரச்சினைகள் ஏற்படும். இன்றைய தொலைபேசிகளால் அதிகம் பாதிக்கப்படுபவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர்களே ஆவர். இச்சிறுவர்கள் இத்தொலைபேசிகளில் காணொளி விளையாட்டுக்கள் விளையாடுவதால் அவர்களின் செயற்றிறன் வேகம் குறைவடைவதுடன் கண்பார்வையும் பாதிக்கப்படுகின்றது.


வாகனம் ஓட்டுபவர்கள் தொலைபேசியைப் பயன்படுத்துவதனால் வீதி விபத்துக்களும் ஏற்படுகின்றது. மாணவர்கள் கைத்தொலைபேசிகளில் கற்கும்போது தொலைபேசிகளின் இடையிடையே வருகின்ற விளையாட்டுக்கள், படங்கள், பாடல்கள் மூலம் கவனம் சிதறடிக்கப்படும். மேலும் தொலைபேசிகளின் பாவனையினால் கலாசார பாதிப்புக்களும், முகமறியாத தீயவர்களின் நட்பு, திருட்டுக்கள், பாலியல் துஸ்பிரயோகங்கள் போன்ற தீய விடயங்களில் மனிதன் நாட்டங்கொள்ளத் தூண்டப்படுகின்றான்.

எனவே நாம் தொலைபேசியினை நல்ல வழியில் பயன்படுத்தி அவற்றின் நன்மைகளைப் பெற்று இன்றைய நவீன வாழ்க்கைக்கு உகந்ததாகப் பயன்படுத்துவோம்.

**தி.கஜனன்**

**யா/கொக்குவில் இந்துக் கல்லூரி**

**தரம்:- 08**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான் விரும்பும் பெரியார் அப்துல்கலாம்

1. அப்துல்கலாம் 1931ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 15ம் திகதி தமிழ்நாட்டின் இராமேஸ்வரம் எனும் ஊரில் ஆவுல் பக்கீர் ஜெய்னுலாப்தீன் மற்றும் ஆஷியம்மா தம்பதியினரிற்கு மகனாகப் பிறந்தார்.
2. இவர் தனது ஆரம்பக் கல்வியை சொந்த ஊரிலேயே கற்றார்.
3. இவரது குடும்பம் வறுமையில் இருந்ததால் இவர் பாடசாலை முடிந்ததும் பத்திரிகை விநியோகம் செய்ய ஆரம்பித்தார்.
4. இவர் திருச்சி புனித ஜோசெப் கல்லூரியில் இயற்பியல் கல்வி கற்று இளங்கலை பட்டத்தை பெற்றார்.
5. சென்னையில் எம்.ஐ.ரி கல்லூரியில் விண்வெளி பொறியியல் கற்று முதுகலைமானிப் பட்டத்தையும் பெற்றுள்ளார்.
6. அப்துல் கலாம் இந்திய இராணுவத்திற்காக சிறிய உலங்கு வானூர்தியை வடிவமைத்தார்.
7. அப்துல்கலாம் 1980ம் ஆண்டு SLV-111 ரொக்கட்டைப் பயன்படுத்தி ரோகினி என்ற துணைக்கோளை வெற்றிகரமாக ஏவச்செய்தார்.
8. இதற்காக இந்திய அரசு பத்மபூஷன் என்ற விருதை 1981ல் இவருக்கு வழங்கியது.
9. 1999ல் பொக்ரான் அணுஆயுதச் சோதனையில் முக்கிய பங்காற்றியவருள் அப்துல்கலாம் ஒருவராவார்.
10. இதுவரை அவர் ஐந்து ஏவுகணை திட்டங்களில் பணி புரிந்துள்ளார்.
11. 2002 ஜீலை 25ல் 11வது இந்தியக் குடியரசுத் தலைவராக பதவியேற்றார்.
12. 2007ம் ஆண்டுவரை இந்தியக் குடியரசின் தலைவராக பதவி வகித்தார்.
13. இவருக்கு இந்திய அரசு பாரதரத்னா விருதினை வழங்கி கௌரவித்தது.
14. இவர் பாரதரத்னா விருதுபெற்ற மூன்றாவது குடியரசுத் தலைவரென பெருமை பெற்றார்.
15. சிறந்த விஞ்ஞானிகள் குழந்தைகளே என்று இவர் எப்போதும் கூறுவார்.

**மோ.ஹரிவர்சன்**

**யா/மகாஜனாக் கல்லூரி**

**தரம் 08**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப் பொருளை ஒழிப்போம்

அன்பார்ந்த வாசகர்களே நாங்கள் உங்களுடன் பகிர்ந்து கொள்ளப்போவது போதை ஒழிப்பு பற்றியது.

இன்றைய சமுதாயம் எதிர்நோக்கியுள்ள மிகப்பெரிய சவால்களில் ஒன்று போதைப்பொருள் பாவனையாகும். பொழுது போக்கிற்காகவும், சிறிது நேரம் கிடைக்கும் அற்ப சந்தோசத்திற்காகவும் பயன்படுத்தப்படும் இப்போதைப் பொருட்களே உடல் நலத்திற்கு கேடு விளைவித்து உயிரிழப்புக்களை உண்டாக்கி பல சீர்கேடுகளையும் தோற்றுவித்து நிற்கின்றது.

இந்நிலையில் போதைப் பொருள் பாவனையினைத் தடுத்து நிறுத்துவதும், அவை தொடர்பாக மக்களிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்துவதும் மிகவும் அவசியமானது. போதைப் பொருட்களைப் பயன்படுத்தும்போது அவற்றுக்கு உதாரணமாக:- மதுபான வகைகள், புகையிலை, அபின், கஞ்சா போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவற்றுள் மதுபான வகைகள் அனைவராலும் பயன்படுத்தப்படும் ஒன்றாகக் காணப்படுகின்றது. மதுபானத்திற்கு அடிமையாகி அதனைப் பயன்படுத்துவோர் தவிர, நாகரிக மோகத்தினாலும், சமூக ரீதியாக தமது செல்வச் செழிப்பைக் காட்டிக் கொள்வதற்காகவும் மதுபானங்களைப் பயன்படுத்துபவர்களும் உள்ளனர்.

அபின், கஞ்சா போன்ற போதைப் பொருட்கள் பயன்பாட்டிற்கு தடை விதிக்கப்பட்டவையாகும். இவற்றைப் பயன்படுத்துவது மிகவும் மோசமான விளைவுகளை ஏற்படுத்தும். இந்த அனைத்துப் போதைப் பொருட்களுமே நாடுகளின் கடுமையான சட்ட விதிகளுக்கு உரியனவாகக் காணப்படுகின்றன. இன்றைய இளம் சமுதாயம் பரவலாக போதைப் பாவனைக்கு உட்பட்டு வருகின்றது. விளையாட்டாக ஆரம்பிக்கும் இப்பழக்கம் நாளடைவில் உயிரிழப்பை ஏற்படுத்தும்.

எனவே போதைப் பொருள் அற்ற ஒரு சமூகத்தை நாம் அனைவரும் உருவாக்க பணியாற்றுவோம்.




**ப.கரிகரன்**

**யா/ ஸ்கந்தவரோதயாக் கல்லூரி**

**தரம்:- 09**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகிழ் சஞ்சிகை பற்றிய எனது விமர்சனம்

கடந்த ஆண்டு எனது கன்னி ஆக்கத்தைத் தாங்கி வந்த சஞ்சிகை முகிழ் என்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். வலிகாமம் தெற்கு பிரதேச சபை , பொது நூலகம் , சிறுவர் வாசிப்பு வட்டம் என்னும் தொனிப்பொருளில் ஆரம்பிக்கப்பட்ட இச் செயற்பாடானது சிறுவர்களுடைய வாசிப்பை மேம்படுத்துவதில் ஆக்கமுடனும் முயற்சியுடனும் திகழ்கின்றது. பல்வேறுபட்ட ஆக்கங்களை தாங்கி நிற்பது சிறப்பான அம்சமாகும்.

தற்கால சூழலில் மாணவர்களுடைய தேடல்களும் , சிந்தனைகளும் இவ்வாறான சிறுவர் வாசிப்புவட்ட சஞ்சிகை ஆக்கங்களினூடாக திசை திருப்புவது வரவேற்கத்தக்க விடயமாகும். இவ்வாறான செயற்பாடுகள் தொடர்ச்சியாக செயற்படுத்தி வாசிப்புடன் கூடிய எதிர்கால எழுத்தாளர்கள், கவிஞர்கள் , பேச்சாளர்கள் போன்றோரை உருவாக்க அடித்தளமாகும்.

இச் சஞ்சிகை ஆக்கத்தின் ஊடாக பிள்ளைகளது திறமைகளை வெளிக்கொண்டுவரும் எண்ணம் மேலும் விரிவடைந்து சிறப்படைய விரும்புகின்றேன். இதற்கு சிறுவர்களாகிய நாம் கைகோர்த்து ஒன்றிணைவோம் என எதிர்பார்க்கினறேன்.

**ஜெ.தன்சிகா**
**யா/ மகாஜனக் கல்லூரி**
**தரம் - 7**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முத்திரை சேகரித்தல்

இதனை அஞ்சல்தலை என்றும் குறிப்பிடுவர். இவ் முத்திரை சேகரிப்பதை பிலெட்டலி என்ற பெயர் சூட்டப்பட்டுள்ளது. சிறியோர் முதல் பெரியவர் வரை இச் சேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர். இன்று தொழில்நுட்ப வளர்ச்சியால் தபால் போக்குவரத்து குறைந்து காணப்படுகின்றது. கூடுதலாக பொதிகள் அனுப்புவதற்கு பயன்படுத்தப்படுகிறது.

தபால் தலையை வெளியிடுவதற்கு தபால் திணைக்களமே உரிமை உடையது. பொன்னி பிளாக் என அழைக்கப்படும் முதலாவது முத்திரை 1840 ஆம் ஆண்டு மே மாதம் முதலாம் திகதி இளம் அரசி விக்டோரியாவின் படத்துடன் இங்கிலாந்தில் வெளிவந்தது. இலங்கையில் ஏப்பிரல் 1ம் திகதி 1857ல் விக்டோரியா மகாராணி படத்துடன் முதல் முத்திரை வெளியிடப்பட்டது. 1948 சுதந்திரத்தின் பின் பல விடயங்களும் உடைய அஞ்சல்தலை வெளிவரத் தொடங்கியது.

இவ் அஞ்சல்தலைகள் முக்கோணம், சதுரம், வட்டம், இணைகரம், பலகோணம் போன்ற அமைப்பில் வெளிவந்துள்ளது. முத்திரையில் அதன் பெறுமதி (விலை), நாட்டின் பெயர், அந்நாட்டின் வரலாறு, புவியியல், கலாசாரம், பெயர்பெற்ற இடம் , தலைநகர் , நாட்டின் சிறப்பு என்பவற்றை படமாக பதிப்பார்கள் . பாாப்பதற்கு மிக அழகாக இருக்கும்.

நான் முத்திரைகளை முத்திரை புத்தகத்தில் ஒழுங்கான முறையில் ஒட்டி வைத்துள்ளேன். இதில் பல அழகான முத்திரைகள் உள்ளன. இதனை எனது நண்பாகள் , உறவினர்கள் பார்த்து மகிழ்வார்கள். இதில் எனக்கும் பெருமையாக இருக்கும். ஆசிரியர்களும் ஊக்கப்படுத்துவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது வெளிநாட்டு உறவினர்கள் அங்கு உள்ள முத்திரைகளை அனுப்புவார்கள். என்னிடம் ஒரே இன முத்திரைகள் பல இருப்பின் அதனை நண்பர்களிடம் கொடுத்து என்னிடம் இல்லாதவற்றை அவர்களிடமிருந்து பெற்றுக் கொள்வேன். எனவே பணம் செலவழிக்காமலே இதனைச் சேகரிக்க முடியும். எனது வீட்டிற்கு வரும் தபால் தலைகளை பாதுகாப்பான முறையில் பிரித்தெடுத்து ஒட்டுவேன்.

இம்முத்திரைகளைச் சேகரித்து ஒட்டும்போது அவை அழகாக இருக்கும் இதனைப் பார்க்க மகிழ்ச்சியாக இருக்கம். அத்தோடு இதில் இருககும் படங்கள் பற்றிய அறிவைத் தேடிப் பெறும் ஆசை ஏற்படும். இதனால் பொது அறிவு வளர்ச்சி அடையும். உதாரணமாக இந்தியாவில் முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் அவர்களின் தலை பதித்த முத்திரை வெளியிடப்பட்டது. அவர் யார் என்றும், அவர் பற்றிய விளக்கமும் தேடி அறியும் ஆர்வமும் எழுந்தது. அதேபோல் பல விடயங்களை தேடி அறியும் ஆர்வம் ஏற்பட்டது.

முத்திரைகளை நினைவுத்தபால் தலைகளாகவும் வெளியிடுகின்றனர். ஒரு இடத்தை, நிகழ்வை, நபரைக் கௌரவித்தல் போன்றவற்றுக்காக வெளியிடுவதாகும். இதன்மூலம் நாம் விடயங்களை தெரிந்து கொள்ள முடியும். உதாரணமாக 1947 யூலை 02இல் இந்திய அரசர், ஏற்றுக் கொள்ளப்பட்ட தேசியக்கொடி பொறிக்கப்பட்ட தபால் தலை ஜெய் ஹிந்த் என்ற தலைப்பில் 1947 நவம்பர் 21ல் வெளிவந்தது. காந்தியைக் கௌரவிக்க 100 இற்கும் மேற்பட்ட நாடுகள் காந்தியின் படம் கொண்ட முத்திரையை வெளியிட்டது.

இலங்கையில் எழுபத்தைந்தாவது தேசிய சுதந்திர தினத்தை முன்னிட்டு இலங்கைத் தபால் திணைக்களத்தினால் நினைவு முத்திரை வெளியிடப்பட்டது. இதன் பெறுமதி ரூபா 50.00.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்திரை சேர்ப்பதனால் நண்பர்களிடையே பகிர்ந்தளிக்கும் மனநிலை உருவாகிறது. இதனை வரலாற்று ஆவணங்களாகவும் பயன்படுத்தலாம். இப்பயன்பாடுகளைக் கொண்ட பொழுதுபோக்குச் செயற்பாடு நமக்கும் பிறருக்கும் மிகவும் பயனுடையதாக அமைகின்றது.

த. அபிஷேக்

யா/கொக்குவில் இந்துக் கல்லூரி

தரம் - 10








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி

இக்கண்காட்சி வடக்கின் நுழைவாயில் என்று அழைக்கப்படுகின்றது. இவ்வருடம் 13வது தடவையாக இக்கண்காட்சி நடைபெற்றது. கொழும்பில் பிரபல வர்த்தக நிறுவனங்கள் மற்றும் உள்ளூர் உற்பத்திகளையும் இணைத்து யாழ்ப்பாணத்தில் இச்சந்தை நடைபெற்றது. சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் தமது உற்பத்திகளை தெற்கு தொழில் முயற்சியாளர்களுடன் இணைந்து தமது உற்பத்திகளை சந்தைப்படுத்துவதற்கு தொழில்நுட்ப ரீதியில் தொடர்புகளை வளர்த்துக் கொள்ளவும் உதவியாக இருக்கும். 250 கண்காட்சிக் கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. பாடசாலை சீருடையில் வருபவர்கள் இலவசமாக பார்வையிடமுடியும். இக் கண்காட்சியானது வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இக் கண்காட்சி மூன்று நாட்கள் நடைபெற்றது.

**பி.கிருத்தியன்**
**யா/ பரியோவான் கல்லூரி**
**தரம் 10**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீட்டு நூலகம்

1. நாம் ஒவ்வொருவரும் சிறுவயதிலேயே வீட்டு நூலகம் வைத்திருக்க வேண்டும்.
2. நான் சிறிய கதைப்புத்தகங்கள் கட்டுரை கவிதை எனப்பல புத்தகங்களை வைத்துள்ளேன்
3. மாலை நேரத்தில் புத்தகங்கள் வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டேன்.
4. பாடசாலையில் இடம்பெறும் வாசிப்புப் போட்டியில் முதல் இடம் பெறுவேன்.
5. சிறுவர்கள் மகிழக்கூடிய வகையில் பாட்டுப் புத்தகங்களையும் சேகரித்துள்ளேன்.
6. எனது அலுமாரியில் புத்தகம் அடுக்கி வைத்திருக்கும் அழகைப் பார்க்க வாசிக்கத் தோன்றும்.
7. தொலைக்காட்சி பார்ப்பதைக் குறைத்து நூலகப் புத்தகங்களையே அதிகமாக வாசிக்கிறேன்.
8. என்றும் நல்லவற்றையே பார்த்து நல்லவற்றையே கேட்டு நல்ல புத்தகங்களையே வாசித்து வந்தால் எதிர்காலம் நன்றாக அமையும்

**மோ.ஹரிலர்ஷன்**

**யா/சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை**

**தரம் - 04**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## வீரர்களின் போர்

1. யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மற்றும் யா/தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி அணிகள் இடையிலான கிரிக்கட் போட்டி வீரர்களின் போர் என அழைக்கப்படும்.
2. இப்போட்டியானது சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் நடைபெற்றது
3. 21வது வருடமாக நடைபெறும் குறித்த போட்டி 11 தடவை சமநிலையில் முடிந்ததுடன் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி 5 தடவையும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி நான்கு தடவையும்வெற்றி பெற்றுள்ளது.
4. இப்போட்டியானது இரண்டு நாட்கள் நடைபெற்றது
5. இம்முறை முதல்நாள் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி வெற்றி பெற்றது. இறுதிநாள் மகாஜனாக் கல்லூரி வெற்றி பெற்றதனால் இப்போட்டி சமநிலையில் முடிவடைந்தது.

**பா.விஸ்மிதன்**

**யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி**

**தரம் - 07**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org